உண்மையும் நீதிக்குமான
சர்வ தேச செயற்றிட்டம் (ITJP )

*ஊடக அறிக்கை*

ஸ்ரீலங்காவில் சித்திரவதைக் கலாச்சாரத்தை ஆண்டாண்டு காலமாக நிலவி வரும் சட்டத்தை துச்சமாகக் செயற்படும் நிலை வலுப்படுத்துவதாக விபரித்து ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது . இது புதிய அரசு சித்திரவதை தடுப்பதை மையமாகக் கொண்டு சர்வதேச சமூகத்திற்கும் சர்வதேச சட்டங்கள் கோரும் கடப்பாடுகளுக்கமைய ஒழுகும்படி ஜனாதிபதி சிறிசேனாவின் அரசாங்கத்திற்கு ஞாபகமூட்டும் அறைகூவல் ஆகும். கடந்த ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் சித்திரவதைக்கான விசேட அறிக்கையாளரான ஜுவான் மெண்டிஸ்ஸின் விஜயத்தின் பின்னான அறிக்கை நேற்று வெளியிடப்பட்டுள்ளது .

ITJP யின் நிறைவேற்றுப்பணிப்பாளரான ஜஸ்மின் சூக்கா இவ்வாறு கூறியுள்ளார் "ஸ்ரீலங்காவில் சித்திரவதை தொடர்பான குற்றச்சாட்டுக்களின் அடிப்படையிலான புலனாய்வுகளை நடத்தி வழக்குத் தொடரும் பொறுப்பை நிறைவேற்ற சட்டமா அதிபரின் அலுவலகத்துடன் தொடர்பில்லாத சுயாதீனமான அலுவலகம் ஒன்றை அமைக்க வேண்டும் என்று சரியானதும்பாரதூரமான விளைவுகளைக் கொண்ட விடயம் இவ் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது . அதற்கான புலனாய்வுக்குழுவை தெரிவு செய்ய சர்வதேச நிபுணர்களை அடையாளம் கண்டு எம்மால் உதவ முடியும் என வெளிநாட்டமைச்சருக்கும் , இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவிற்கும் தெரிவித்திருந்தோம். இவ் விடயம் தொடர்பாக நியாயம் வழங்குவதில் அவர்களுக்கு ஆர்வமாக இருந்திருந்தால் குறித்த விடயத்தை இரண்டு வருடங்களிற்கு முன்னரே செய்து முடித்திருக்கலாம் "

குறித்த விசேட அறிக்கையாளரின் கூற்றுப்படி 2015ம் 2016ம் ஆண்டிலும் கூடசிறிசேன அரசாங்கத்தின் ஆட்சியின் கீழ் "வெள்ளை வான் ஆட்கடத்தல்கள்" நடைபெற்றதற்கான நம்பகரமான அறிக்கைகள் அவருக்கு கிடைத்துள்ளது .

மேலும் சூக்கா அம்மையார் இவ்வாறு கூறியுள்ளார் "தொடர்ந்து நடைபெறும் உரிமை மீறல்கள் சம்பந்தமான சாடசியங்களை ஏற்றுக்கொள்வதில் பெருமளவிலான தயக்கம் இருந்து வருகிறது.

ஆனால் பாதுகாப்புத்துறையில் சீர்திருத்தங்கள் செய்யாது விடின் இவ் வகையான மீறல்கள் தொடருவது தவிர்க்க முடியாது போகும். இவை தொடர்பான ஆதாரங்களை மிகவும் கஸ்ட்டப்பட்டு ITJPயும் எமது வைத்தியத்துறை சகாக்களும் , மனித உரிமை அமைப்புகளும் சேகரித்துள்ளன. அப்படியிருக்க தொடர்ந்து நடக்கும் ஆட்கடத்தல்களை ஏற்றுக்கொண்டால் அரசியல் ரீதியான சங்கடங்கள் ஏற்படும் என்ற காரணத்திற்க்காக அதனை ஏற்றுக்கொள்ள மறுப்பது நூற்றுக்கணக்கான பாதிப்புற்றோருக்கு செய்யும் மன்னிக்க முடியாத அவமதிப்பாகும் .

ஐக்கிய நாடுகள் சபையின் இல 30/1 கொண்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதை மெதுவாகவும் , நியாயத்தின் பக்கமாக மாற்றம் அடையும் வேகம் வலுவிழந்துள்ளது . இந்நிலை யில் இவ்வகையிலான செயற்பாடுகளின் போது நாட்டினுள்ளும் வெளியிலும் இருக்கும் பாதிப்புற்றோரின் நம்பிக்கையை பெற்றுக் கொள்ள அவர்களின் பங்களிப்பின் தேவையை வலியுறுத்துகின்றது.

INTERNATIONAL
TRUTH
AND JUSTICE
PROJECT